ஏற்காடு ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான 40 ஏக்கர் நிலத்தை தோட்டக்கலைத் துறை மற்றும் தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனத்திற்கும் நில மாற்றம் செய்தல்.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி.4) துறை**

**அரசாணை (நிலை) எண். 26** **நாள்: 18.2.2008.**

**படிக்கப்பட்டவை:**

1. சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் கடித ந.க.எண்.65339/07/தி2, நாள் 27.11.2007.
2. ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநர், கடித எண்.95087/07/பராஅ 3.2, நாள் 28.12.2007.
3. ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநர், கடித ந.க.எண்.95087/07/பரா III (2)1–3, நாள் 9.1.2008.

---

**ஆணை:–**

சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், படிக்கப்பட்ட கடிதம் 1–இல், சேலம் மாவட்டம், ஏற்காட்டில், ஊட்டியில் உள்ள உள்கட்டமைப்பினை போல், ஏற்காட்டிலும் அமைக்க, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், நடப்பு ஆண்டு சட்டமன்ற பேச்சு அறிவிப்பில் தெரிவித்துள்ளவாறும் மற்றும் 32வது ஏற்காடு கோடைவிழா துவக்க விழாவின் போது தெரிவித்துள்ளதற்கிணங்கவும், சேலம் மாவட்டம், ஏற்காடு ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான (சாலை நீங்கலாக) 40 ஏக்கர் நிலத்தில், 4 ஏக்கர் நிலத்தினை தோட்டக்கலைத் துறைக்கும், மீதமுள்ள 36 ஏக்கர் நிலத்தினை தோட்டக்கலைத் துறையைச் சார்ந்த தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனத்திற்கும் (TANHOPE), ஆக மொத்தம் 40 ஏக்கர் நிலத்தினை புல்தரை மற்றும் கொய்மலர்கள் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்டவாறு நில மாற்றம் செய்ய, அரசின் அனுமதியை வழங்க கேட்டுக் கொண்டுள்ளார்.

| வ.எண். | பட்டா எண். | புல எண். | மொத்த விஸ்தீர்ணம் | சாலைகள் மற்றும் பிற உபயோகப் பகுதிகள் நீங்கலாக வழங்கக் கூடிய நிலம் விஸ்தீர்ணம் | உபயோகம் | நில மாற்றம் செய்ய வேண்டிய துறை, நிறுவனத்தின் பெயர். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 165 | 7/6 A3B | 12.35 | 4.00 | புல்தரை | தோட்டக்கலைத் துறை |
| மொத்தம் | | | 12.35 | 4.00 | | தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம். (TANHOPE) |
| 1. | 165 | 7/4 A1A3 | 38.65 | 3.00 | கொய் மலர்கள் | |
| 2. | 165 | 7/4 A1A2 | 16.44 | 14.00 | | |
| 3. | 165 | 7/6 A1 | 45.67 | 19.00 | | |
| மொத்தம் | | | 100.76 | 36.00 | | |
| ஆக மொத்தம் | | | 113.11 | 40.00 | | |

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் படிக்கப்பட்ட கடிதம் 2–இல், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பி வைத்த முன்மொழிவின்படி, ஏற்காடு ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான 40.00 ஏக்கர் நிலத்தினை தோட்டக்கலைத் துறை மற்றும் தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனத்திற்கு(TANHOPE) தமிழ்நாடு ஊராட்சிகள் (அசையா சொத்து மாற்றம் மற்றும் ஆர்ஜிதம்) விதிகள், 2000–விதி 5–இன் படி நில மாற்றம் செய்வதற்கு அரசின் ஆணையை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

4. கவனமான ஆய்வுக்குப் பின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்கலாமென அரசு முடிவு செய்தது. அவ்வாறே தமிழ்நாடு ஊராட்சிகள் (அசையா சொத்து மாற்றம் மற்றும் ஆர்ஜிதம்) விதிகள், 2000–விதி 5–இன் படி, சேலம் மாவட்டம், ஏற்காடு ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான 40 ஏக்கர் நிலத்தில், மேலே பத்தி 1–இல் குறிப்பிட்டபடி தோட்டக் கலைத் துறைக்கு 4 ஏக்கர் நிலமும், தமிழ்நாடு தோட்டக் கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனத்திற்கு (TANHOPE) 36 ஏக்கர் நிலமும், நில மாற்றம் செய்ய அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி,**
அரசு சிறப்பு ஆணையர் மற்றும் செயலாளர்.